பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹூ தை மீ 08 உ திங்கட்கிழமை (21-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 55

## ★ 4 பொம்மர்கள் ★ 3 அவ்ரோக்கள் ★ 2 ஹெலிகள்

# கொடூரக் குண்டு வீச்சு!

# வல்வையில் 8 பேர் பலி!!

## வீடுகள், கட்டடங்கள் தரைமட்டம் கடலோரப்பகுதி சின்னாபின்னம்

*—வல்லையிலிருந்து உதயன் செய்தியாளர். ஜீ. எஸ். லிங்கம்—*

வல்வெட்டித்துறை, ஜனவரி 21

**வல்வெட்டித்துறையில் ஊரிக்காடு முதல் நெடியகாடு வரை உள்ள கடலோரப்பகுதிகளில் நேற்று மாலையில் பெரும் எடுப்பில் நடத்தப்பட்ட கண்மூடித்தனமான அகோர விமானத் தாக்குதலில் எட்டுக்கும் அதிகமானோர் பலியாகினர்; முப்பதுக்கும் அதிகமான பொது மக்கள் காயமடைந்தார்கள்; நூறுக்கும் அதிகமான வீடுகள் தரைமட்டமாகின; நான்கு கோயில்கள் சேதமுற்றன; ஐம்பதுக்கும் அதிகமான சைக்கிள்கள் சின்னாபின்னமாகின; பத்துக்கு மேற்பட்டவள்ளங்கள் மூழ்கடிக்கப்பட்டன; பல கட்டடங்கள்; உடைமைகள் நாசமாகின.**

**நான்கு பொம்மர்கள், மூன்று அவ்ரோவிமானங்கள், இரண்டு ஹெலிக்கொப்டர்கள், ஒரு சி-பிளேன் ஆகியவை இந்தக் கண்மூடித்தனமான தாக்குதலை இரண்டு தடவைகள் நடத்தின.**

நேற்று பிற்பகல் 3-30 மணியளவில் வல்வைப் பகுதிக்கு வந்த 2 ஹெலிகள் மற்றும் பொம்மர்கள் ஊரிக்காடுமுதல் நெடியகாடு வரை உள்ள கரையோரப் பகுதியில் இடம் விடாது அடுத்தடுத்து குண்டு மாரி பொழிந்தன

சற்று நேரம் கழித்து வந்த மூன்று அவ்ரோக்களும் அப்பகுதியில் இருபதுக்கும் அதிகமான பீப்பாய்க் குண்டுகளை வீசின.

சுமார் ஒன்றரைமணி நேரம் இத்தாக்குதல் நீடித்தது.

மீண்டும் 5-30 மணிக்கு வந்த மூன்று அவ்ரோக்களும் இரண்டு ஹெலிகளும் சுமார் அரைமணிநேரம் கண்மூடித்தனமாக இப்பகுதியில் இடம் விடாது குண்டுகளைப் பொழிந்து தள்ளின,

[2 ஆம் பக்கம் பார்க்க]

## ஷெல், பீரங்கித் தாக்கு

வல்வெட்டித்துறை, ஜன 21

வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்றுமாலை விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்திவிட்டு சென்ற பின்னர், இப்பகுதிகளை நோக்கி பலாலியில் இருந்து ஷெல் வீச்சுக்களும் நடத்தப்பட்டன.

கடற்பகுதியில் இருந்து வல்வையை நோக்கி பீரங்கித் தாக்குதலும் நடத்தப்பட்டது

(ஒ-15)

## தொண்டமனாறிலும் நேற்று குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஜன.21

தொண்டமனாறிலும் நேற்று மாலை இரு பொம்மர்கள் குண்டு வீச்சு தாக்குதலை நடத்தின.

வெளிக்கள பயிற்சி நிலையக் கட்டடமும் நீர்ப்பாசனத் திணைக்கள கட்டடமும் சேதமடைந்தன. (ஒ-15)

## முச்சந்தி முரளி



அப்ப... பதுக்கிவையன் பாடு கோவிந்தா எண்டு சொல்லுங்கோ......!

## கட்டடம் சேதம்

யாழ்ப்பாணம், ஜன. 21

நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் கட்டடம் ஒன்று சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

## மூப்பனார் தெரிவு

தமிழக அரசின் எதிர்க்கட்சித் தலைவராக திரு. கருப்பையா மூப்பனார் நேற்று தெரிவு செய்யப்பட்டார்

இதுவரைகாலமும் ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. கவே பிரதான எதிர்க்கட்சியாக இருந்து வந்தது. அ. தி. மு. கவில் இருந்து மாதப்பன் என்ற எம்.எல் ஏ விலகியதை அடுத்தே சட்டசபையில் இ. காங்கிரஸ் பிரதான எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றது.

## நேற்றுக் காயமுற்றோர்

வல்வெட்டித்துறை, ஜன. 21

வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விமானத் தாக்குதலின் போது காயமுற்ற 21 பேர் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் விவரம் வருமாறு: மூத்துலிங்கம் புனிதலிங்கம் [31 வயது] பருத்தித்துறை, கந்தசாமி இராஜேஸ்வரி (50) வல்வை, வீரகத்தி பார்வதி [50] கரவெட்டி, அவரது மகள் இரத்தினவாசா, (31), ரங்கநாதன் ஜெயராணி (28) வல்வை, சிவனேசன் வனஜா [36] வல்வை.

[2 ஆம் பக்கம் பார்க்க]

## விமானக் குண்டுவீச்சில் ஆஸ்பத்திரி சேதம்!

வவுனியா மாவட்டம் இரணை இலுப்பைக்குளம், விளாத்திக்குளம் ஆகிய பகுதிகளிலும் நேற்றுக்காலை 9 மணியளவில் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இரண்டு பொம்மர்கள், இரண்டு ஹெலிகள் இரண்டு அவ்ரோ ஆகியவை இத்தத் தாக்குதலை நடத்தின.

இந்தத் தாக்குதலினால் இரணை இலுப்பைக்குளம் சந்தியில் ஒர் அரிசி ஆலை, 12 கடைகள் ஆகியவை உட்பட பல கட்டடங்கள் கடும் சேதமடைந்தன.

அரசினர் ஆஸ்பத்திரியும் முற்றாகச் சேதமடைந்தது, ஆஸ்பத்திரியில் இருந்த மருந்துப் பொருள்கள், மருத்துவ உபகரணங்கள் ஆகியவை நாசமாகின.

அப்பகுதியில் கால்நடைகள் பலவும் உயிரிழந்தன.

## மக்கள் இடம்பெயர்வு

நேற்று இடம்பெற்ற கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்களை அடுத்து வல்வெட்டித்துறை மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பீதியால் வெளியேறிக் கொண்டிருந்தனர்.

பெரும் எண்ணிக்கையானோர்கள் நடைபாதகுழந்தை குட்டிகளுடன் சென்றுகொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. (ஒ-15)

## வலி. வடக்கிலும் பொம்மர், ஹெலி தாக்கு!

காங்கேசன்துறை ஜன. 21

வலி. வடக்குப்பகுதியிலும் நேற்று பொம்மர்கள், ஹெலிகள் பல தடவை தாக்குதல்களை நடத்தின

கட்டுவன், குரும்பசிட்டி. வயாவிளான், புன்னாலைக் கட்டுவன் பகுதிகளை இலக்கு வைத்தே தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஹெலிகள் பலாலி முதல் தெல்லிப்பளை வரை சுற்றிச் சுற்றி கிரனேட். றொக்கட் மற்றும் கலிபர் தாக்குதல்களை நடத்தின.

முகாம்களில் இருந்த ஷெல் வீச்சுக்களும் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன.

(ஒ-68-6-5)

## விடத்தல்தீவில்

மன்னார் மாவட்டம், விடத்தல் தீவில் நேற்று முன்தினம் மாலை 4. 30 மணியளவில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

குண்டு வீச்சினால் 3 வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. 6 வீடுகள் சேதமுற்றன. (ஒ)

## குருமண்காட்டில் ஆயுதங்கள் மீட்பு

வவுனியா குருமண்காடு இராணுவ முகாம் பகுதியில் நேற்று முன்தினம் காலையில் 6. 30 மணி முதல் ஒரு மணி நேரம் இடம்பெற்ற மோதலில் படையினரின் காவல் அரண் ஒன்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்; சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த மோதலில் இரண்டு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

உயிரிழந்த சிப்பாயிடம் இருந்து ரி-56 ரக துப்பாக்கி-1, மகஸின்-3. ஏ. கே. எல். எம். ஜி. ரம் மகஸின்-2, லிங்-200, ஐ. எம். ரவை - 250, ஆகியவை புலிகளால் மீட்கப்பட்டன.

லவன் (தர்மலிங்கம் யோகராஜா-விளாத்திக்குளம்), நிக்ஸன் (கணேஷ் ஜெயதாஸன் - ஓமந்தை) ஆகியோரே வீரமரணமடைந்தனர். (உ)

## வளைகுடாப் போரால் இலங்கையில் நெருக்கடி

ஜெனிவா, ஜன. 21

வளைகுடா நெருக்கடி காரணமாக இலங்கை உட்பட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் பலத்த கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிவரும் என்று உலக வங்கி எச்சரித்துள்ளது.

பங்களாதேஷ், பாகிஸ்தான், எதியோப்பியா ஆகிய நாடுகளும் நெருக்கடியை எதிர்நோக்கும் என உலக வங்கி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (உ-எ)

## குடமுருட்டி வாய்க்கால் வெள்ளத்தில் மினிபஸ்!

### சனி இரவு தடம் புரண்டது

பூநகரி, ஜன. 21

வீதிக்கு குறுக்காக பெருக்கெடுத்து ஓடும் பூநகரி குடமுருட்டி வாய்க்கால் வெள்ளத்தின் ஊடாகப் பிரயாணம் செய்த மினிபஸ் ஒன்று நேற்று முன்தினம் இரவு பாதையை விட்டு விலகி. வெள்ளத்தினுள் தடம்புரண்டது.

அதில் பயணம் செய்த சுமார் 30 பயணிகள் எவ்வித உயிராபத்தும் இன்றி மீட்கப்பட்டனர். ஆனால் பயணிகள் பலர் தமது உடைமைகளை இழந்தனர்.

ஒரு பெண்மணி தான் கொண்டு சென்ற சுமார் ஒரு லட்சம் ரூபா பணத்தை வெள்ளத்துக்கு பறி கொடுத்தார்; சிலரது நகைகளும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

சம்பவம் பற்றிக் கேள்வியுற்ற பூநகரி நல்லூர் பகுதிப் பொதுமக்கள் விரைந்து, தீவிரமாக போராடி பயணி

[2 ஆம் பக்கம் பார்க்க]

## ம.எண்ணை, மா, சீனிக்கு விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். மாவட்டத்தில் ஆறு வகையான அத்தியாவசியப் பொருள்களுக்கு யாழ்-மாவட்ட வர்த்தகர் சங்கம் விலை நிர்ணயம் செய்துள்ளது. புதிய விலை விவரம் வருமாறு:-

| பொருள் | மொத்த விலை ரூ. ச. | சில்லறை விலை ரூ. ச. |
|---|---|---|
| ★ மா [1 கிலோ] | 25 00 | 27 00 |
| ★ சீனி [1 கிலோ] | 36-00 | 38-00 |
| ★ மண்எண்ணை [1 லீற்றர்] | 25-00 | 30-00 |
| ★ தேங்காய் எண்ணை [1 லீற்றர்] | 36-50 | 40-00 |
| ★ சன்லைட் [1 கட்டி] | 7-25 | 8-25 |
| ★ சர்க்கரை [1 கிலோ] | 36-00 | 38-00 |

அத்தியாவசிய பொருள்களின் [illegible] காரணிகளைக் கண்டறிவதற்காக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச வர்த்தகர்களோடு நடந்த புதனன்று கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

கொழும்பிலிருந்து பொருள்களை ஏற்றி வருவதற்கான கூலியை 8 ஆயிரம் ரூபாவிலிருந்து ஒரு லட்சம் ரூபாவாக [வரி உட்பட] லொறி உரிமையாளர்கள் கூட்டியதும்—

இங்குள்ள வர்த்தகர்களுக்கு பொருள்களைக் கொழும்பிலிருந்து ஏற்றிக் கொடுப்பதைவிட தாமே பொருள்களைக் கொண்டுவந்து, அதிகரித்த விலையில் சில்லறை வியாபாரிகளுக்கு நேரடியாக விற்பதில் லொறி உரிமையாளர்கள் அதிக அக்கறை காட்டுவதும்—

வவுனியாவுக்கு இப்பால் கொண்டுவரப்பட்ட பொருள்

[2 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
27 - 1 - 1930

மறைவு :
31 - 1 - 1990

திதி :
21-1-1991

## அமரர் கந்தப்பிள்ளை பரராஜசிங்கம்

தாங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும், உங்களை மறக்க முடிகிறதில்லையே. உங்கள் போன்று உற்றதுணை வேறு யார் உளரோ. இறைவன் வடிவாக இருந்து எம்மை இரட்சிப்பீர் என்று நம்பினோம்; நம்புகிறோம்; நம்பியிருக்கிறோம்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும் நிற்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்,

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [15568]

# மரண அறிவித்தல்கள்

## திரு. பொன்னுத்துரை சிவசூரியர்

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

அன்னாரின் பூதவுடல் நேற்று (20-1-91) பிற்பகல் 4 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி

9/1, உடையார் ஒழுங்கை,
ஐயனார் கோவில் வீதி,
வண்ணார்பண்ணை. (15238)

## சுப்பிரமணியம் சுந்தரராசா

(Retired Bank Officer, State Bank of India)

சுப்பிரமணியம் சுந்தரராசா 17-01-1991 அன்று சிவபதமடைந்தார்.

இவர் தேவகி (ஆசிரியை, காரை இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், காரைநகர் களபூமியைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்புக்காத்து K. K. சுப்பிரமணியம், திருமதி சுந்தரம்மா சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகம் வைத்திலிங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரது பூதவுடல் 18-01-1991 வெள்ளிக்கிழமை தகனம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பேராசிரியர் ச. வை. பரமேஸ்வரன்
(15570) (மைத்துனர்)

## கணபதிப்பிள்ளை முருகேசு

காரைக்கட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், நல்லூர் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மலாயன் பென்சனியர் கணபதிப்பிள்ளை முருகேசு 20-01-91 ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலம் சென்ற பின்லையம்மாவின் அருமைக் கணவரும், திரு. மு. பரமேஸ்வரன் (அதிபர், செங்குந்த இந்துக் கல்லூரி), இளைப்பாறிய ஆசிரியை திருமதி பு. மங்கஸ்வாமி (செங்குந்த இந்துக் கல்லூரி), ஆசிரியை திருமதி ஸ. பரமேஸ்வரி B Sc.- (Govt College மட்டக்களப்பு), திருமதி ஆ. யோகேஸ்வரி (நுவகிலாந்து), திரு. மு. விக்னேஸ்வரன் (இத்தாலி), திருமதி இ. ஜெகதீஸ்வரி (நுகிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆசிரியர் திரு. ச. பரமேஸ்வரன் (செங்குந்த இந்துக் கல்லூரி), திரு. ச. சுந்தரலிங்கம் (Operation Manager, இ. போ. ச., கல்முனை), சட்டத்தரணி அமரர் மு. ஆலாலசுந்தரம் (முகாமையாளர் கோப்பாய், பா. உ.), திருமதி ப. புனிதசீலி, திருமதி வி. புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று திங்கட்கிழமை பி. ப. 3.00 மணிக்கு நடைபெறும். பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

388/4, பருத்தித்துறை வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். [15569]

தகவல்:
மு. பரமேஸ்வரன்
(செங்குந்த இந்துக் கல்லூரி)

# இடம்பெயர்ந்து வந்த ஆசிரியர் நிலை குறித்து ஆராய இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 21

இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நல்லூர் பணிமனையில் நடைபெறவிருப்பதாக சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

அண்மைக்கால யுத்தநிலை காரணமாக வடக்கு, கிழக்கின் ஏனைய மாவட்டங்களிலிருந்து யாழ் மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்து மீண்டும் வேலைக்குத் திரும்ப முடியாதிருக்கும் ஆசிரியர்களின் பிரச்சினைகள் குறித்தும் —

அவர்களுக்குத் தற்காலிகமாவேனும் யாழ் மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுப்பது குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். [உ]

## கொடூரக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரவலாக நாலா புறமும் வீசப்பட்ட குண்டுகள் வீழ்ந்து வெடித்தபோது டெமராட்சி அதிர்ந்தது. நேற்று மாலை வல்வைப் பகுதி எங்கும் புகைமண்டலமாகக் காட்சியளித்தது.

பல வீடுகள் தரைமட்டமாகிக் கிடந்தன.

பல இடங்களில் பதுங்குகுழிகள் விமானக் குண்டு வீச்சுக்கு ஆளாகி ஆழ்ந்து மூடுண்டிருந்தன. சேதமுற்ற வீடுகளின் இடிபாடுகளால் சில பதுங்குகுழிகள் மூடப்பட்டுள்ளன.

இந்தப் பதுங்குகுழிகளுக்குள் மேலும் பலர் சிக்கிக் கிடக்கலாம் என அஞ்சப்பட்டது.

வல்வை சிவன்கோவிலடியில் இவ்வாறு மூடப்பட்ட ஒரு பதுங்குகுழியின் இடிபாடுகளை அகற்றியபோது உள்ளேயிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிருடன் மீட்கப்பட்டனர். இளம் பெண் ஒருத்தி சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார்.

திருமேனி பிள்ளை காஞ்சனாதேவி (வயது 24) என்ற இளம்பெண்ணே பதுங்குகுழிக்குள் உயிரிழந்தவராவார்.

அவரது தந்தையான திருமேனிப்பிள்ளை, சகோதரிகளான கமலாதேவி, சரோஜினிதேவி ஆகியோர் சிறு காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

விமானத் தாக்குதலினால் வல்வை ஆதிகோவில் முற்றாகச் சேதமுற்றது.

வல்வை அம்மன் கோவில், சிவன்கோவில் ஆகியனவும் பெரும் சேதமடைந்தன.

வல்வை பிள்ளையார் கோவிலிலும் சிறிது சேதம் ஏற்பட்டது.

நெடியகாடு பிள்ளையார் கோவில் அருகே ஒரு சடலமும், வல்வை வேம்படி கடற்கரையோரப் பகுதியில் மூன்று சடலங்களும் அடையாளம் காணப்படாத நிலையில் நேற்று மாலை காணப்பட்டன.

வள்ள வேலை செய்வதற்காக வல்வெட்டித்துறைக்கு வந்திருந்த தொப்புக்காடு, காரைநகரைச் சேர்ந்த குருமேனி நவரத்தினம் என்பவரின் சடலம் கடற்கரையோரத்தில் கிடக்கக் காணப்பட்டது.

ஆதிகோவிலடிப் பகுதியைச் சேர்ந்த சிங்காரம் தில்லையம்பலம் (60 வயது) என்ற வயோதிபர் தமது வளவில் உயிரிழந்து கிடந்தார்.

இந்தத் தாக்குதலில் தனியார் கல்வி நிறுவனம் ஒன்று சேதமடைந்தது. அதன் வளவில் நின்ற ஐம்பதுக்கும் அதிகமான சைக்கிள்கள் சின்னாபின்னமாகின.

கடலோரத்தில் கட்டி நின்ற பத்துக்கும் மேற்பட்ட வள்ளங்கள் மூழ்கடிக்கப்பட்டன.

விமானங்கள், அவ்ரோக்களிலிருந்து எண்ணிக்கையிட முடியாத அளவுக்கு அடுத்தடுத்து குண்டுகள் வீசப்பட்டதாகவும்—

ஹெலியிலிருந்து கண்மூடித்தனமாகச் சூட்டுகள் நடத்தப்பட்டதாகவும்—

வல்லையிலிருந்து நேற்று இரவு [illegible] ஒருவர் [illegible]. [உ-15]

## குடமுருட்டி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை மீட்டதாகவும் சொல்லப்பட்டது.

கடற்புலிகள் [illegible] மினிபஸ் நேற்று வரை மீட்கப்படாது அப்படியே இருந்தது.

தற்போது வெள்ளம் ஓரளவு குறைந்து விட்டதால மினிபஸ்கள் மற்றும் லொறிகள் இப்பகுதியூடாக போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. [உ-6]

## ம.எண்ணெ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை பல இடங்களில் களஞ்சியப்படுத்தி, செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, இரக்கமற்ற முறையில் லாபம் சம்பாதிக்க முற்பட்டதுமே விலை அதிகரிப்புக்குக் காரணம் என வர்த்தகர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சந்திப்பை அடுத்து பொருள்களுக்கு புதிய விலைகளை நிர்ணயித்த வர்த்தகர் சங்கத்தினர் பின்வரும் நடைமுறைகளையும் கடைப்பிடிப்பது என முடிவு செய்துள்ளனர்:

★ பொருள்களை வர்த்தகர்கள் கொள்வனவு செய்யும்போது விற்பவரை அடையாளம் காட்டும் விவரங்கள் அடங்கிய ரசீது ஒன்றைப் பெற வேண்டும். அதில் பொருளின் கொள்முதல் விலையைக் குறிப்பிட வேண்டும்.

★ நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அல்லது அதற்குக் குறைந்த விலைக்கு விற்க முடியாது எனக் கருதப்படும் பொருள்களை வர்த்தகர்கள் கொள்வனவு செய்யக்கூடாது.

★ விலைகள் பற்றிய விடயங்களை வர்த்தகர் சங்கம் கட்டுப்படுத்தும் எனவும் தேவைப்படும்போது விலைகளை மீளாய்வு செய்யும்.

—இந்த விவரங்கள் சங்கத்தினால் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## நேற்று...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

துரைராஜா புஷ்பராஜா (22) முள்ளைத்தீவு, இளவப்பெடியன் செல்லன் (45) மானாங்கணை, மதுரை சொக்கலிங்கம் மகேந்திரமூர்த்தி (63) தெணியம்பை, அவரது மனைவி பரமேஸ்வரி (54), திருமதி தங்கவேல் நவரத்தினம் (61) ஆதிகோவிலடி.

பொன்னுச்சாமி பாலசுப்பிரமணியம் (64) வல்வை, இராசேந்திரம் அறிவழகன் (20) ஆதிகோவிலடி, மயூரேசமூர்த்தி ரொனி (16) வல்வை, வேலும்மயிலும் ரஞ்சனதாஸ் (33) நெடியகாடு நடனசபாபதி ஞானவேல் (54) வல்வை.

க. சிவசுப்பிரமணியம் (26) வல்வை, நா. துரைராசா வல்வை, ஏ. செல்வம் மனோகரன் (18) வல்வை.

[illegible] நால்வர் மிக [illegible] நிலையில் இருந்தனர். [ஓ-15]

# உலர் உணவு அட்டை; மக்கள் மத்தியில் வதந்தி

யாழ்ப்பாணம், ஜன. 21

உலர் உணவு அட்டை விடயத்தில் விடுதலைப் புலிகளைச் சம்பந்தப்படுத்தி சிலர் வதந்திகளைப் பரப்பி வருகின்றனர். இது விடயத்தில் புலிகளுக்கு எதுவித சம்பந்தமும் இல்லை.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் இது சம்பந்தமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

யாழ் மாவட்டத்தில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள உணவு அட்டைகளை மீளபரிசீலனைக்கு உட்படுத்தப்படுவதாக அறியமுடிகிறது.

உலர் உணவு அட்டைகளை சிலர் தவறான வழியில் பெற்று, பணம் சம்பாதிக்க முயற்சித்தபோது பிடிபட்டுள்ளனர்.

இவ்வாறு செய்தவர்கள் அதை மறைப்பதற்காக இப்போது வதந்திகளை பரப்பி வருகின்றனர். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் உலர் உணவு அட்டைகளை பரிசீலிப்பதற்கோ அல்லது வேறு வகையில் மக்களை சிரமங்களுக்கு உள்ளாக்கும் எந்தச் செயற்பாட்டையும் செய்யவில்லை என்பதை தெரிவிக்க விரும்புகிறோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

## இழப்பு குறித்து குளறுபடி

வளைகுடா போர் இழப்புகள் குறித்து இரு தரப்பினரும் முரண்பாடான தகவல்களை வெளியிட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

154 பன்னாட்டுப் போர் விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக ஈராக் அறிவித்துள்ளது. ஆனால் 13 போர் விமானங்கள் (அமெரிக்கா-6, இத்தாலி-4, பிரிட்டன்-2, குவைத்-1) ஈராக்கினால் சுட்டு வீழ்த்தப்பட்டன என்று பன்னாட்டுப் படை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

★ பன்னாட்டுப் படைகளின் தாக்குதலில் ஈராக்கில் 96 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும்-

அவர்களில் 31 பேர் இராணுவ வீரர்கள் என்றும் ஈராக் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

பன்னாட்டுப் படைகளின் தாக்குதலில் ஈராக் 50 போர் விமானங்களை இழந்துள்ளது என்றும்-

எஞ்சிய 650 போர் விமானங்களை ஈராக் பாதுகாப்பாக பரமாணடமான நிலவறைகளுக்குள் வைத்திருக்கிறது என்றும் பிரிட்டிஷ் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

ஈராக் மற்றும் குவைத் நாடுகளில் உள்ள ஈராக்கிய தரைப்படைத் தளங்கள் மீது பன்னாட்டுப் போர் விமானங்கள் நேற்று நடத்திய தாக்குதலில் ஐந்து ஈராக்கிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என அமெரிக்கத் தரப்பு பேச்சாளர்கள் தெரிவித்தனர்.

40 ஈராக்கிய படையினரும் அப்போது கொல்லப்பட்டனர் எனவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## புஷ்ஷின் பிரதிநிதி விரைவு

ஜனாதிபதி புஷ் நேற்று அவசரமாக தனது உதவி வெளிநாட்டமைச்சரை இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவுக்கு அனுப்பி வைத்தார்.

எந்தச் சூழ்நிலையிலும் வளைகுடாப் போரில் பங்குபற்றுவதில்லை என்ற உறுதிமொழியை இஸ்ரேலிடம் இருந்து பெறுவது சம்பந்தமான பேச்சுக்களை நடத்துவதில் அமெரிக்க உதவி அமைச்சர் ஈடுபடுவார் என்று அறிவிக்கப்பட்டது.

## நேற்று கடும் தாக்குதல்

ஈராக்கில் வடக்குப் பகுதியில் இருந்து தெற்கு வரை பன்னாட்டுப் போர் விமானங்கள் நேற்றும் கடும் தாக்குதலை நடத்தியதாக பக்தாத் அரசு அறிவித்தது.

நூற்றுக் கணக்கான பன்னாட்டுப் போர் விமானங்கள் பதினாறு தாக்குதல்களை நடத்தியதாகவும் அவற்றில் மூன்று பக்தாத் நகர் மீது நடத்தப்பட்டதாகவும் அரச அறிக்கை தெரிவித்தது.

## நேட்டோ நாடுகளும் தாக்கும்

துருக்கியை ஈராக் தாக்கினால் ஈராக் மீது நேட்டோ நாடுகள் தாக்குதல் நடத்தும். 16 நாடுகள் அங்கம் வகிக்கும் நேட்டோ அணியின் தலைமைச் செயலர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

நேட்டோ அணியில் துருக்கியும் அங்கம் வகிக்கிறது. துருக்கி மீது ஈராக் நடத்தும் தாக்குதலை தனது உறுப்பு நாடுகள் மீதான தாக்குதலாக நேட்டோ அணி கருதும் என்றும் அவர் கூறினார்.

## அணு ஆலை சேதம்

ஈராக்கின் தலைநகருக்கு அருகில் உள்ள அணு ஆலை நேற்று பன்னாட்டுப்படைப் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் சேதமடைந்ததாக அமெரிக்கத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

★ ஈராக்குக்கு ஆதரவாக வளைகுடாப் போரில் இறங்கும்படி சூடான் அரசுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. சூடான் தலைநகர் கார்டூமில் இதனை வலியுறுத்தி லட்சக்கணக்கான சூடானியர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

★ வளைகுடாப் போரை நிறுத்தி யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவரவேண்டும் எனக்கோரி, பல நாடுகளைச் சேர்ந்த சுமார் 5 லட்சம் முஸ்லிம்கள் நேற்று பங்களாதேஷில் கூட்டுப் பிரார்த்தனையை நடத்தினர்.

★ வளைகுடாப் போரில் முதல் மூன்று தினங்களும் 4 ஆயிரத்துக்கு அதிகமான தாக்குதல் பயணங்களை பன்னாட்டுப் போர் விமானங்கள் மேற்கொண்டன என்று பென்டகன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

★ குவைத்தில ஈராக் தரைப்படைகள் மீது தரைத் தாக்குதலை ஆரம்பிப்பதற்காக பன்னாட்டு தரைப்படைகள் சவூதி எல்லையில் குவைத்தை நோக்கி கவச பீரங்கி வாகனங்கள் மற்றும் பாரிய போர்க் கருவிகளுடன் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டது.

★ பக்தாத் நகரிலிருந்து 120 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஜனாதிபதி சதாம் ஹுசேனின் சொந்தக் கிராமமான திக்ரித் மீதும் பன்னாட்டுப்படைகள் நேற்று கடும் விமானத் தாக்குதலை நடத்தின.

★ சவூதி அரேபியா மீது சனிக்கிழமை இரவு ஈராக் நான்கு ஸ்கட் ஏவுகணைகளை ஏவியது. அவை பாலைவனத்தில் வீழ்ந்து வெடித்தன என்று சவூதி அரசு அறிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சுயதிட்டங்கள் செய்வோம்

தமிழ்ப் பகுதிகளின் சுகாதாரத் தேவைகளை நாமே திட்டமிட வேண்டும்.

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரியில் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்ட, "ஆரம்ப சுகாதார சேவையாளருக்கு ஒரு வழிகாட்டி" என்ற சுகாதார நூலை ஆய்வுரை செய்த யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் தெய்வேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

திட்டங்கள், நடைமுறைகள் அவை எத்துறை சார்ந்தவையாயினும், சம்பந்தப்பட்ட பகுதி மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு வகுக்கப்பட வேண்டியவை.

வடக்கு - கிழக்குப் பிரதேச மக்கள், இப்போது நாட்டின் ஏனைய பகுதி மக்களைவிட எந்தவிதத்திலும் புறம்பான, வேறுபாடான, கஷ்டமான, நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த நிலை தொடருமே அன்றி அகன்று போவதற்கான அறிகுறிகள் இல்லை. ஒரு காலத்தில் தற்போதைய நிலை அகலுமாயினும், இப்போதைய பாதிப்பு நிச்சயம் தொடரவே செய்யும்.

எனவே நிர்வாகம், பொருளாதாரம், சமூக அபிவிருத்தி, விவசாயம், உற்பத்தி, சுகாதாரம் உட்பட்ட சகல துறைகளிலும் தமிழ்ப் பகுதிகளுக்கென தனியான திட்டங்கள் தேவை. தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடிய, காலத்துக்கு உகந்த திட்டங்களை நாமே வகுக்க வேண்டும். அவை நெருக்கடியான வேளையிலும், கஷ்டங்கள் மிகுந்த காலத்திலும் இலகுவில் செயற்படுத்தக் கூடியனவாக, மக்கள் எதிர்பார்க்கும் பலன்களை விளைவிக்க வல்லனவாக இருக்க வேண்டும்.

கொழும்பில் இருந்து கொண்டு வகுக்கப்படும் திட்டங்கள் எதுவும் தமிழ்ப் பிரதேசங்களுக்கு இனி உதவப் போவதில்லை. தள நிலைமையை நேரில் அறியாது, தமிழ்ப் பிரதேசங்களின் சூழ்நிலையை உணராது தமது எண்ணப் போக்குக்கு கொழும்பு அதிகாரிகள் வகுக்கும் திட்டங்கள் வெறும் கனவாகவும், கானல் நீராகவுமே அமையும்.

ஆகையால் சகல துறைகளிலும், சமூக வளர்ச்சிக்கான எல்லாப் பிரிவுகளிலும் அத்தியாவசிய, அவசர சேவைகளிலும் எமது மக்கள் நலன் நாடும் நற்றிட்டங்கள் வகுக்கப்பட வேண்டியது அவசியம். அது அவசரம்; உடனடித் தேவை.

கொழும்பிலிருந்து திணிக்கப்படும் திட்டங்களுக்கு, டணிப்புகளுக்கு இசைந்து போக வேண்டும் என்ற அடிமைப் புத்தியை எமது அதிகாரிகள் தமது மனத்தளத்தில் இருந்து இனி அகற்றிவிட வேண்டும். எமது பகுதி மக்களுக்குப் பயன் தரும் சுயதிட்டங்களை வகுத்து அவற்றையே அமுல் செய்வோம் என்ற மனப்பலம் வரவேண்டும். அதனைச் செய்தால் தங்கள் பதவி பறிபோய்விடுமே என்ற மனப் பயம் பறந்துவிட வேண்டும்.

கொழும்பிலிருந்து வகுக்கப்படும் திட்டங்கள் எமது மக்களுக்குச் சரிவரப் பயன்படவில்லை என்பதை கண்ணாரக் கண்டு, மெய்யார அனுபவிக்கிறோம். அதன் பின்னரும் சுயதிட்டங்களை வகுத்துச்செயற்படுத்தப் பின்னுக்கு நிற்பவர்கள், சொந்த மக்களின், தங்கள் உறவுகளின், ஏன் தங்களினதும் தமது பிள்ளைகளினதும் நலனில் அக்கறை இல்லாத பதர் அதிகாரிகளே!

# கலைத்துறை மாணவர் அனுமதி

# இனி திறமை அடிப்படையில்

## ஏனைய துறைகளிலும் திறமைக்கு கூடுதல் இடம்

கொழும்பு, ஜன. 21

பல்கலைக் கழகங்களில் கலைப்பிரிவுக்கு மாணவர் அனுமதி 1992 இல் இருந்து 100 க்கு 100 வீதம் திறமை அடிப்படையில் இடம்பெறும்.

ஏனைய துறைகளுக்கான அனுமதி மீளாய்வு செய்யப்பட்ட புதிய திட்டம் ஒன்றின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.

புதிய திட்டத்தின் கீழ் திறமைக்கு கூடுதல் பங்கு வழங்கப்படும்.

1992 ஆகஸ்ட் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளை அடிப்படையாக வைத்தே புதிய அனுமதி இடம் பெற இருப்பதாக கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி சொன்னார்.

கலைப்பிரிவுதவிர்ந்த ஏனைய துறைகளுக்கான பல்கலைக் கழக அனுமதி புதிய திட்டத்தின் கீழ் பின்வருமாறு அமையும்;

★ நாடளாவிய திறமை அடிப்படையில்-40 சதவீதம்.

★ மாவட்ட அடிப்படையில - 55 சத வீதம்;

★ பின்தங்கிய மாவட்டங்களுக்கு - 05 சதவீதம்.

தற்போதைய நடைமுறையின் கீழ்:- திறமை (நாடளாவிய) — 30 சத வீதமும் மாவட்ட அடிப்படையில் — 65 சதவீதமும் பிற்போக்கான மாவட்டங்களுக்கு — 5 சத வீதமும் ஒதுக்கப்படுகிறது.

புதிய திட்டத்தின் கீழ் பின்தங்கிய மாவட்டங்களாக திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி, அனுராதபுரம், பொலனறுவை, மொனராகலை, நுவரெலியா ஆகியனவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே அம்பாந்தோட்டை, மன்னார், முல்லைத்தீவு, பதுளை, அம்பாறை ஆகியனவும் பின்தங்கிய மாவட்டங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

புதிய திட்டம், மாவட்ட அடிப்படையில் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறுவதைக் குறைக்காது. திறமை அடிப்படையில் அனுமதி பெறுபவர்களின் விகிதத்தை அதிகரித்துள்ளது என்றும் அமைச்சர் அத்துலத்முதலி சொன்னார். (இ-எ)

## மாவட்ட அடிப்படை அனுமதிக்கு

# 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை இடமும் கவனிக்கப்படும்

மாவட்ட அடிப்படையிலான பல்கலைக்கழக அனுமதிக்கு, எந்த மாவட்டத்தில் அந்த மாணவர் ஐந்தாம் வருட புலமைப் பரிசில் பரீட்சை எடுத்தார் என்பதும் கருத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அமைச்சர் லலித் அத்துலத்முதலி சொன்னார்.

தற்போது எந்த மாவட்டத்தில் ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சை, ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சைகளை எடுத்தார் என்பதைக் கவனித்துத்தான் பல்கலைக்கழக அனுமதி மாவட்ட அடிப்படையில் வழங்கப்படுகிறது என்றும் அமைச்சர் சொன்னார். (இ-எ)

# அருள் பொழியும் அன்னை; வசந்த நாகபூஷணி

ஈழத்தின் வடபால் ஏழாலை தெற்கில் களபாவோடை என்னும் சிற்றூர். அங்கே அமையப்பெற்று அழகுறத் தோற்றமளிக்கிறது வசந்த நாகபூஷணி அம்மன் ஆலயம். அந்த இடத்திற்கு வசந்தபுரம் எனப் பக்தர்கள் பெயர் சூட்டியுள்ளனர்.

கடந்த வருடம் தைமாதம் இக்கோவில் புதுக்கி அமைக்கப் பெற்று கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இன்று முதலாவது ஆண்டு நிறைவு தினத்தை ஒட்டி சங்காபிஷேகம் நடைபெறுகிறது.

இக்கோவில் அமைய வேண்டிய இடத்தை அம்மனே தெரிவு செய்து அடியார்களுக்குக் காண்பித்தார். பல வருடங்களுக்கு முன்பு சிறு கோவிலாக அமைக்கப்பட்டது. அம்மன் மூலம் தமது குறைகளிலிருந்து விடுபட்டு நிறைவு பெற்ற பலரும் வாரி வழங்கிய நிதியில் இன்று ஒரு முழு அளவிலான ஆலயம் அங்கு காட்சியளிக்கின்றது.

இக்கோவிலைப் பரிபாலிக்கும் பெண், அம்மனின் திரு அவதாரமாகவே பக்தர்களால் கருதப்படுகிறார். இவரது பெற்றோர் இட்டுச் சூட்டிய பெயர் வேறானாலும் இவரை அம்மன் எனவே எல்லோரும் அழைக்கிறார்கள்.

ஆலயத்தில் அர்ச்சகர் எவரும் அமர்த்தப்படவில்லை. அவரே அக்கடமைகளையும் செய்து தீபாராதனை செய்கிறார்.

கூட்டுப்பிரார்த்தனை இவ்வாலயத்திற்கென்றே ஆக்கப்பட்ட பாடல்களைக் கொண்டு பண்ணோடு நடாத்தப்படுகிறது. சமகால நிகழ்வுகளையும், தமிழ் மக்களின் துன்பங்களையும் அதற்கு தீர்வு காண வேண்டியும் அம்மனிடம் வேண்டுதல் விடுத்து இப்பாடல்களில் ஆமதமாலை அமைந்துள்ளன. மிருதங்கம், வீணை, வயலின் ஆகிய பக்கவாத்தியங்களோடு இணைந்து பஜனை நடைபெறும்போது எவருக்கும் மெய் சிலிர்க்கும்.

### அம்மனின் அருமருந்து

இவற்றைவிடப் புதுமையானது இங்கு இடம்பெறும் அற்புதங்களாகும். அம்மனை வழங்கும் திருநீற்றினாலும், தீர்த்தத்தினாலும் பல மாறாத நோய்கள் மாறியுள்ளன.

உதாரணமாக இதுவரையில் வாய்பேசாதிருந்த மூவர் பேசும் சக்தியைப் பெற்றுள்ளனர். கன்னாகத்தைச்சேர்ந்த 15வயதுச் சிறுவன், குராவத்தையைச் சேர்ந்த 12 வயதுச்சிறுமி, அச்சுவேலியைச் சேர்ந்த 25 வயது இளைஞர் ஆகியோரே அவர்கள். திருநீறும தீர்த்தமுந்தான் அம்மன் வழங்கும் அருமருந்து.

ஏழாலை வசந்தநாகபூஷணி அம்மன் ஆலயத்துக்கு விஜயம் செய்பவர்கள் நிச்சயம் மானிட உருவில் நடமாடும் இறையம்சம் பொருந்திய அம்மனைத் தரிசித்து உய்யலாம்.

அருள் பொழியும் அன்னையின் கருணைக் கடாட்சம் பெற... யாரும் ... வாய்த்த அதிர்ஷ்டம். ★

- கு. சிவபாலசுந்தரம்பிள்ளை -

## வேலை நிறுத்தம் ஒத்திவைப்பு

கொழும்பு ஜன. 21

தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு கோரி, தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டி இன்று 21 ஆம் திகதி நடத்த இருந்த வேலை நிறுத்தம் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கூட்டுக் கமிட்டி மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்ய முன்னறிவித்தல் கொடுத்தது.

தேயிலை விலை அதிகரிப்புக்கு ஏற்ப சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்பது அவற்றில் ஒன்றாகும். 1990 மே மாதம் தொடக்கம் தேயிலை விலை உயர்வைக் கணக்கிட்டு தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தை உயர்த்த அரசு இணக்கம் தெரிவித்திருக்கிறது.

அதனைத் தொடர்ந்தே வேலை நிறுத்தம் ஒத்திவைக்கப்பட்டதாக கூட்டுக் கமிட்டி முடிவு செய்ததாக கமிட்டி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தையல் பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், மாவட்ட தொழிற்திணைக்களத்தால் காங்கேசன்துறையில் நடத்தப்பட்ட தையல் பயிற்சி நிலைய வகுப்புகள் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன் கிழமை தொடக்கம் தற்காலிகமாக மானிப்பாய் உடுவில் வீதியில் உள்ள மானிப்பாய் சங்குவேலி தையற்பயிற்சி நிலையத்தில் தொடர்ந்து நடத்தப்படும்.

இதனை உதவித் தொழில் ஆணையாளர் திரு. கே. சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

காலை 8-30 மணிக்கு பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகும். (இ)

## மாவீரர் குடும்ப அங்கத்தவருக்கு இலவசக் கல்வி

கோப்பாய் எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட் கல்வி நிறுவனம் மாவீரர் குடும்ப அங்கத்தவர்களுக்கு இலவசக் கல்வி வழங்க உள்ளது.

ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரை கல்வி கற்க இந்த வசதி செய்யப்பட்டுள்ளது.

அவ்வப்பகுதி விடுதலைப் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளரின் சிபாரிசுடன் பிரஸ்தாப கல்வி நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

## சிரமதானம்

யாழ். பல்கலைக்கழக வளவினுள் அமைந்துள்ள பரமேஸ்வரர் ஆலய சுற்றாடல் பகுதியை மாணவர்களும், உத்தியோகத்தர்களும் கடந்த வாரம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். [இ-6]

# இஸ்ரவேல் பதிலடி இல்லை அமெரிக்காவுக்கு உத்தரவாதம்

டெல்அவிவ், ஜன. 21

ஈராக் மீது தற்போதைக்கு பதில் தாக்குதல் நடத்துவதில்லை என்று இஸ்ரவேல் அறிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கு இந்த முடிவை இஸ்ரவேல் பிரதமர் யிற்சாக் ஷமிர் நேற்று அறிவித்தார்.

ஈராக்கின் இரண்டாவது ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தொலைபேசி மூலம் திரு. ஷமிருடன் தொடர்பு கொண்டார்.

"உங்கள் கவலை, உங்களுக்கு ஏற்பட்டுள்ள நிர்ப்பந்தம் எனக்கு புரிகிறது. போரைத் திசை திருப்பும் சதாமின் முயற்சிக்கு இடம் கொடுக்காதீர்கள். சகித்துக் கொள்ளுங்கள். உங்கள் நாட்டை மேலும் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்க நான் நடவடிக்கை எடுக்கின்றேன்" என்று திரு. புஷ் அப்போது சொன்னார்.

## ரஷ்யருக்கு வெளியேற்ற உத்தரவு

பாக்தாதில் தற்போது எஞ்சியிருக்கும் நூற்றுக்கு அதிகமான சோவியத் பிரஜைகளை உடனடியாக வெளியேறும்படி ஜனாதிபதி மிக்கெயில் கோர்பச்சேவ் நேற்று தனது அதிகாரிகளை பணித்தார்.

# இரசாயன ஆயுத தாக்குதல் நடந்தால் மட்டுமே பதிலடி

இரசாயன ஆயுதங்களைக் கொண்டு ஈராக் தாக்குமானால் இஸ்ரவேல பதில் தாக்குதலை நிச்சயமாக நடத்தும்.

இஸ்ரவேல் பாதுகாப்புப் படைப் பிரதம தளபதி நேற்று இப்படித் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கும் இது தெரியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

## யுத்தக் கைதிகள் விவகாரம்

யுத்தக் கைதிகளை ஐ. நா. சாசன வழிகளின்படி மனிதாபிமான முறையில் நடத்த வேண்டும் என்று அமெரிக்கா ஈராக்கை நேற்று எச்சரித்தது.

வாஷிங்டனில் உள்ள ஈராக் தூதரை வெளியுறவு அமைச்சுக்கு அழைத்து இது தொடர்பான கடிதத்தை அமெரிக்க அதிகாரிகள் கொடுத்தனர்.

போர் ஆரம்பித்த பின்னர் அமெரிக்கா ஈராக்குடன் நேற்றுத்தான் முதன்முதலாக ராஜதந்திரத் தொடர்பை வைத்தது.

# ஏவுகணைகளைச் சுட இஸ்ரவேலுக்கு "பேட்ரியட்"

எதிரிகளின் ஏவுகணைகளை நடுவானில் வைத்து சுட்டு வீழ்த்தக் கூடிய 'பேட்ரியட்' (Patriot) ஏவுகணைகளை இஸ்ரவேலுக்கு அமெரிக்கா நேற்று அவசரமாக அனுப்பி வைத்தது.

இவற்றை ஏற்றிக் கொண்டு போய் டெல் அவிவ் மற்றும் ஜெருசலம் நகரங்களில் இறங்குவதற்காக பல விமானங்கள் நேற்று ஈடுபடுத்தப்பட்டன.

இவற்றை இயக்குவதற்காக அமெரிக்க படை வீரர்களையும் வாஷிங்டன் அரசு இஸ்ரவேலுக்கு அனுப்பி வைத்திருக்கிறது.

'பேட்ரியட்' ஏவுகணைகள் சில ஏவப்படுவதற்கான தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் திரு புஷ் அறிவித்தார்.

'பேட்ரியட்' ஏவுகணைகளை இயக்குவதில் இஸ்ரவேலியர்கள் போதிய பயிற்சியைப் பெற்ற பின்னர் அமெரிக்க வீரர்கள் தாயகம் திரும்பி வருவர் என்றும் திரு. புஷ் அறிவித்தார்.

## பன்னாட்டுப் படைகள் புதிய யுக்தி.

நான்காவது நாளான நேற்றில் இருந்து வளைகுடாப் போரில் புதிய போர் உத்தியை பன்னாட்டுப் படைகள் கையாண்டு வருகின்றன என்று அறிவிக்கப்பட்டது.

ஈராக்கின் தரைப் படைகளை செயலிழக்கச் செய்வதாக பன்னாட்டுப் போர் விமானங்களின் நடவடிக்கைகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

## ஹுசேனின் மகன் எழுதிய கடிதம்

ஜனாதிபதி சதாம் ஹுசேனின் மூத்த புதல்வர் உதே ஹுசேனும் ஐந்து லட்சம் ஈராக்கிய துருப்புக்களில் ஒருவராக குவைத்தில் நின்று போரிடுகிறார்.

இப்படி பக்தாத் வானொலி அறிவித்தது.

போர் முனைக்கு போகும் முன்னர் தந்தைக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் -

"உங்கள் வீரத்துக்கும், ஆண்மைக்கும் என் வாழ்த்துக்கள். போர் முனைக்குச் செல்வதற்கு முன்னர் உங்களைச் சந்தித்து பேசவிரும்பினேன் முடியவில்லை. நான் திரும்பி வந்து உங்களைச் சந்திப்பேன். ஈராக்கின் தெனாகுதியில் போராடும் வீரர்களுடன் சேர்ந்து கொள்ள செல்லும் வழியில் இக் கடிதத்தை எழுதுகின்றேன். ஈராக்கின் சின்னமாக உங்களுக்காக எம்மை அர்ப்பணிக்கிறோம்" -

இப்படி மகன் உதே ஹுசேன் தனது கடிதத்தில் கூறி இருந்தார்.

## இலங்கையர் ஜோர்தானுக்குள் தப்பிச் செல்வதற்கு வாய்ப்பு

ஈராக் மற்றும் குவைத் நாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர் ஜோர்தான் எல்லை ஊடாக அம்மான் செல்லலாம் என்று கொழும்பில் வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று வரை ஜோர்தானில் தஞ்சமடைந்த அகதிகளில் இலங்கையர் எவரும் இருக்கவில்லை என்று அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## யுத்த நிலை பிரகடனம்

நாட்டில் யுத்த நிலையை இஸ்ரவேல் நேற்று பிரகடனம் செய்தது.

பத்திரிகைத் தணிக்கையையும் அரசாங்கம் உடனடியாக அமுலுக்குக் கொண்டு வந்தது.

நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் செய்திகளைப் பிரசுரிப்பது தடைசெய்யப்படும் என்றும் இஸ்ரவேல் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள பியானோ (Piano) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 27/20, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம். (15498)

தரமான வேப்பெண்ணெய் விளக்கெரிக்க, கண் குளிர்ச்சிக்கு, நுளம்புத் தொல்லை விலிருந்து விடுதலை போத்தல் ரூ 80/- மட்டுமே. திருநெல்வேலி, இணுவில், யாழ். மாதிரிச் சந்தை அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது மிலக்வைவற் யாழ்ப்பாணம்.

[சி/5665]

### எரு விற்பனை

இரண்டு லொறி நிறைவு கொள்ளக்கூடிய எரு கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் 1991 - 01 - 31 க்கு முன், எருவை பார்வையிட்டு தம்மால் கொடுக்கக்கூடிய கூறுவிலையை காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.

[சி/5656]

### ரைப்பிங் சேவை

தமிழ் - ஆங்கிலம் (Stencils) ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். மற்றும் தமிழ் - ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகிறது. Fudo, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் முன்பாக) [சி/5664]

### WANTED

1. Work available for elderly lady experienced in English Typing 2 Spacious annexe available for elderly family. 3. Hostel facilities available for students Contact B J. Peter (Sworn Translator) No 11, Somasundaram Avenue Chundikuli Jaffna. on Sundays. [15554]

Teacher for Shorthand and Typing in Jaffna. Apply before 25th. C/o, Uthayan, Jaffna. [15559]

### தேவை

நெல்லி விதைகள். மிக்லைவற் யாழ்ப்பாணம்.

[சி/5667]

# NEW SCIENCE ACADEMY

## 90 A/L

## DAY CLASS

(துரித மீட்டல் வினாவிடை வகுப்புக்கள்)

**PHYSICS**
Mon, Fri; — 8. 30 — 11. 30
நந்தகுமார்

**CHEMISTRY**
Wed; - 8. 30 - 10. 30 — 11; 00 - 1; 00
சண்

**BOTANY**
Tue, Thu; - 8; 30 - 11. 00
குணசீலன்

**ZOOLOGY**
Tue. Wed. - 6; 30 - 7; 30

**PURE / APPLIED MATHS**
Tue, Thu; - 11. 00 - 2. 00
சந்திரமோகன்

(சி/5671)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
(8 - 07 - 1955

மறைவு:
24 - 01 - 1988

திதி: 21 - 01 - 1991
(திங்கட்கிழமை)



திருமதி
## காயத்திரி ஆனந்த இரமணி தர்மசோதி
(ஆசிரியை)

ஆண்டு மூன்று மறைந்ததம்மா ஆனாலும்
ஆறுமோ எம் மனம் ஆறாது.

இவ்வண்ணம் தங்கள் பிரிவால் வாடும்,
கணவர், பிள்ளைகள் பெற்றோர்,
சகோதரர்கள், சகோதரி. மைத்துனர்கள்,
மைத்துனிகள்,
மற்றுமுன் அன்பால் அகம் மகிழ்ந்தோர்.

ஸ்ரீசாலினி,
காங்கேசன்துறை வீதி,
இணுவில். (15560)

# தரம்குறைந்த உலர் உணவு?

யாழ்ப்பாணம், ஜன. 21

சுதுமலை-மானிப்பாய் பகுதியில உள்ள பல நோ. கூ. சங்கக் கிளைகளில் நிவாரணமாக வழங்கிய அரிசி, கோதுமை மா போன்ற உணவுப் பொருள்கள் தரம் குறைந்தவை என்று முறையிடப்படுகிறது.

இவை இலவசமாகக் கிடைப்பதால், பெரும்பாலான பொதுமக்கள், இவற்றின் தரம் குறித்துக் கவலைப் படுவதில்லை என்றும், உரிய இடத்தில் முறையிடுவது மூலம் அரசு தரமான உலர் உணவு வகைகளை அனுப்பி வைக்க வழி ஏற்படும் என்றும் அப்பகுதி பல நோ.கூ. சங்கக் கிளைகளில் நிவாரணம் பெறும் சிலர் கவலை தெரிவித்தனர்.

முதலடைந்த நிவாரணப் பொருள்களை வாங்கி உண்டவர்களில் பலர் வயிற்றோட்டம், வாந்தி ஆகிய நோய்களுக்கு ஆளாவதாகவும் அவர்கள் முறையிடுகின்றனர். (இ)

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு:
18
—
11
—
1965



அநியாய அழிப்பு:
21
—
01
—
1985

## செல்வன் வி. அருளானந்தம்

(இல. 42, நந்தனாஸ் வாழைப்பழக் கடை, மக்கள் சந்தை, பருத்தித்துறை உரிமையாளரில் ஒருவர்)

மூவிரு ஆண்டுகள் ஆயினும் ஆறாத்துயரத்தை - நீ
முதலாய்ப் பிரிந்தநாள் முதல் நெஞ்சில் சுமக்கின்றோம்
நித்தம் சிரித்திருந்த புத்தம் புது மலர் - நீ
நிம்மதியாய் சத்தம் ஏதுமின்றி சடுதியாய் மறைந்தாயோ;
கண்மணி உங்கள் ஆத்மா சாந்தியடைய
கண்ணீர் மல்கி எமது பிரார்த்தனையைச் செலுத்தி
எம்மால் இயன்றதைஉனது சாந்திக்காகச் செய்கின்றோம்,
எமது பிரார்த்தனை உனது ஆத்மா சாந்தியே! சாந்தி!

திதி : 16 1-1991இல் நடைபெற்றது.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

நாகலிங்க முதலியார் ஒழுங்கை,
பருத்தித்துறை. (15518)

# விண்ணக வாழ்வின் ஓராண்டு பூர்த்தி

தோற்றம்:
28
—
06
—
1929



மறைவு:
21
—
01
—
1990

## திருமதி தரேஸ் பெஞ்சமின்

(பிரபல ஆங்கில ஆசிரியர் திரு. ச. பெஞ்சமினின், அன்பு மனைவி)

பாச மலரே!
எங்கள் இல்லத்தின் எழிலாய்
உள்ளத்தின் ஒலியாய் திகழ்ந்தாய்
கஷ்டம் என்று வந்தால் நீ கை கொடுப்பாய்
ஆபத்து என்று வந்தால் நீ அரவணைத்து வந்தாய்
இந்நிலையில் எங்கள் விழி நீரை வழியவிட்டு
இறைவனடி சென்று விட்டாய்
உன் ஆன்மா இறைவனில் சாந்தியடையட்டும்!

எமது அன்பு அன்னையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக [ 24 - 01 - 91 ] வியாழன் காலை 6; 30 மணிக்கு பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவன், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

[illegible]
அரியாலை. (15502)

# படகுச்சேவைக்கு டீசல்

நெடுந்தீவு, ஜன. 21

நெடுந்தீவு படகுச்சேவைக்கான டீசலைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு எஸ் வேல் முருகுப்பிள்ளை மேற்கொண்டுள்ளார்.

இதன்படி இச்சேவைக்குப் பொறுப்பான வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு டீசல் கிடைக்குமெனவும் போதிய அளவு டீசல் கிடைக்கும் பட்சத்தில் வாரத்தில் மூன்று தினங்கள் படகுச் சேவை இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறப்படுகின்றது.

சேவை அதிகரிக்கப்படும் பட்சத்தில் புதன்கிழமைகளிலும் படகு விடப்படும் தற்சமயம் திங்கள் வெள்ளி ஆகிய இருதினங்களில் படகுச்சேவை நடைபெறுகின்றது.(இ-111)

# University Grants Commission
## GELT & POP Programmes 1991
## for University Entrants
## POSTS OF PART TIME ENGLISH TEACHER

The University Grants Commission will conduct the General English Language Teaching and Practical Orientation Programme for those who qualify to enter the Universities based on Advanced Level exam held in 1989. It will consist of English teaching and work experience in their chosen fields elsewhere, designed to make them more confident as they enter the University.

The English teaching in this programme will include the components of (a) the English Everyday Series (b) An Integrated Course in English for the Advanced Level, (c) Literature/English for specific purposes.

The following categories of teachers with at least ten years experience are eligible to apply for the above posts.

1. English Medium graduates.
2. English trained techers.
3. Graduates with English as a subject for the degree.
4. Teachers with TESL and TEFL qualifications of any University or a Higher Institute of Education.
5. Retired English Teachers with any of the above qualifications and below 65 years of age may apply

Teachers will be expected to take classes on weekday afternoons at regionally distributed centres The course will be for a period of about six months and may involve about 50 hours of work per month.

All teachers selected will receive their letters of appointment from the University Grant Commission and will be paid at UGC approved rates.

Applications prepared on 12" X 8" blank paper, using the specimen given below, should be sent by Registered Post to the undersigned on or before 08th February 1991. The letters 'GELT' and the district preferred should be noted on the top left hand corner of the envelope.

SECRETARY
**University Grants Commission,**
20, Ward Place, Colombo 07.

## Application Form

**Post, of Part Time English Teacher**

1. Name:
2. Designation:
3. Age: 4. Sex:
5. Address: Home:
   Official:
6. District of residence:
7. Professional qualifications:
   (Attach photocopy of certificates)
8. Academic qualifications and subjects qualified in:
   (Attach photocopy of certificate of highest qualification)
9. Relevant experience and training (briefly)
10. Any other special qualifications:

I affirm the truth of the above particulars.

Signature:
Date:

(C-5669)

இப்பத்திரிகை நியூ உதயன் [illegible] (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, [illegible] 21- 1 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org